பரிசுத் தினம்-2013

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

J/KOKUVIL
SRI RAMAKRISHNA VIDYASALAI

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

பரிசளிப்பு விழா – ~~2012~~ 2013, 2014

J/KOKUVIL
SRI RAMAKRISHNA VIDYASALAI

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
பரிசளிப்பு விழா – 2012
அதிபர் அறிக்கை

எமது வித்தியாசாலை வளாகத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் காத்து வரும் எல்லாம் வல்ல வைரவப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்கி என்றும் எம் பாடசாலைக்கும் எமக்கும் ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் அடிதொழுது, வரலாற்றிலே பவளவிழா என்னும் மணிமகுடம் சூடி நிற்கும் இந்நாளிலே எமது பரிசளிப்பு விழா முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் யாழ் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா அவர்களே.

சிறப்பு விருந்தினராக கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் இப்பாடசாலை பழைய மாணவியும் எமது பாடசாலை ஸ்தாபகரின் மருமகளுமான திருமதி பூங்கோதை பாலசுப்பிரமணியம் அவர்களே.

இப்பாடசாலையின் அதிபராக அரும்பெரும் சேவையாற்றி ஓய்வு நிலையில் இன்று கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி. செ. நவரட்ணம் அம்மையார் அவர்களே. இப்பாடசாலை வளர்ச்சிக்கு அளப்பெரும் பணியாற்றிய, எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய முன்னாள் அதிபர் திரு. இ. சிவபாதசேகரம் ஐயா அவர்களே, எமது வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சந்தனக்குருக்கள் அவர்களே, விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் கல்வித்திணைக்கள அதிகாரிகளே, இப்பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் ஆசிரியர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே,எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் விருந்தினர்களே பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே பாடசாலையின் தூண்களான பெற்றோர்களே, நலன்

விரும்பிகளே, எமது வித்தியாலய ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் அன்பும் இன்ப உவகையும் பெருக இதயம் கனிந்து இருகரம் கூப்பி எம் பாடசாலைச் சமூகம் சார்பில் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்று எமது வித்தியாலய அன்னைக்கு பவள விழா கண்ட மனநிறைவோடு வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டிருக்கின்றோம். இன்றைய பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் உயர்திரு சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா அவர்கள், எமது கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்ற பெருமை மிகுபதவிக்குரியவர், தாங்கள் ஆரம்பக்கல்வியை கி/ கண்டாவளை மகாவித்தியாலயம், கி/ முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயம் என்பவற்றில் பெற்றுக்கொண்டு உயர்தரக்கல்வியை முன்னணிப் பாடசாலையான யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொண்டீர்கள். 1980ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புவியியல் சிறப்புத்துறை மாணவனாகக் கல்வி கற்ற நீங்கள் 1985ம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று ஆசிரியர், அதிபர் என்ற சேவை நிலைகளில் 18 வருடங்கள் திறம்பட சேவையாற்றினீர்கள் 1995ம் ஆண்டில் பட்டப்பின் கல்வியை (டிப்ளோமா) மேற்கொண்டு பட்டம் பெற்றீர்கள். தங்களிடம் புவியியல் துறையில் கல்வி கற்ற மாணவர்கள் 80 பேர் பல்கலைக்கழக உயர் கல்வி பெற வழிசெய்தமை தங்கள் வினைத்திறன் மிக்க சேவைக்கு சான்றாகும்.

2003ம் ஆண்டில் யாழ் கல்வி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வந்து, அதே ஆண்டிலேயே கனடாவில் நடைபெற்ற அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வில் கலந்து கொண்ட சிறப்பைப்பெற்றீர்கள். 2004ம் ஆண்டில் யா/சன்மார்க்க வித்தியாலய அதிபராகி உன்னத பணியாற்றினீர்கள். தாங்கள்

அதிபராகக் கடமையாற்றிய பாடசாலைகளில் அடுத்த சேவையைப் பொறுப்பேற்ற அதிபர்களுக்கு எவ்வித வேலைப் பளுவையும் வழங்காது அதிபர் கதிரையில் அமரும்படி செய்துள்ளீர்கள். 2005ம் ஆண்டில் கல்வித்துறையில் உயர்பட்டமான கல்வி முதுமாணி பட்டத்தினைச் சூடிக்கொண்ட தாங்கள் 2009ம் ஆண்டு நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றீர்கள். தங்களது சேவைக் காலத்தில் நல்லூர்க் கல்விக் கோட்டத்தை தீவிலேயே அதிசிறந்த கல்விக் கோட்டமாக திகழ வைத்தீர்கள். நல்லூர் கல்விக் கோட்டத்தை புதுப்பொலிவுடன் மிளிரச் செய்ததுடன் இங்குள்ள அதிபர்கள் நிர்வாகத் தெளிவுடன் கடமையாற்ற வழி காட்டினீர்கள்.

01. 06. 2011 இல் S.L.E.A.S என்ற இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து 03. 07. 2013 தொடக்கம் யாழ் கல்வி வலய கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சிறப்போடு உன்னத பணியாற்றிக் கொண்டிருக்கும் தாங்கள் எமது விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிப்பதைப் பெரும் பேறாகக் கருதுகின்றோம். தாங்கள் மென்மேலும் உயர்நிலை பெற வேண்டுமென்பதோடு, சகல சௌபாக்கியங்களோடும் நலமே வாழ வாழ்த்தி வரவேற்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

சிறப்பு விருந்தினர் திருமதி பூங்கோதை பாலசுப்பிரமணியம் அவர்கள் எமது பாடசாலை அன்னையின் மதிப்பார்ந்த புதல்வி. இப்பாடசாலையிலே கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றார். க.பொ.த(உயர்தரம்) சித்தியடைந்து தபால் அதிபராகப் பதவி வகித்தார். திருமணத்தின் பின்பு பொறியியலாளரான கனவருடன் கொழும்பில் வசித்து வரும் இவர், எமது வித்தியாசாலை ஸ்தாபகர் அமரர் இராசையா தம்பித்துரை ஐயாவின் மருமகளாவார். ஸ்தாபகர் குடும்பத்தினர் இன்றும் எம்பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த

அக்கறை கொண்டு எமக்குப் பக்கபலமாக இருந்து வருகின்றமை போற்றத்தக்கது. பாராட்டத்தக்கது. இவர்கள் பாடசாலை ஸ்தாபகர் நிதியத்தின் ஊடாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரணதரத்தில் சித்தி பெற்று உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், உதவித்தொகை வழங்கி வருவது கல்வியின்பால் இவர்கள் கொண்டுள்ள உயர் சிந்தனையின் வெளிப்பாடாகும். அத்தோடு பவளவிழா சிறப்பு மலருக்கான நிதியினை தாராளசிந்தனையுடன் தந்துதவியுள்ளார்கள. எமது பாடசாலை முன்னேற்றத்துக்கு தங்களாலான உதவிகளை செய்வதற்கு என்றுமே தயங்க மாட்டார்கள் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்பாடசாலையில் 1980 – 1994ம் ஆண்டு வரை பதினான்கு வருடங்கள் அதிபராக உன்னத பணியாற்றிய கௌரவ விருந்தினரான ஸ்ரீமதி செ.நவரட்ணம் அம்மா அவர்களே, தாங்கள் ஒரு விஞ்ஞானப்பட்டதாரி. தாங்கள் அதிபர் பதவியை அலங்கரித்த போது இப்பாடசாலை தூய அன்னை சாரதாதேவியின் பெயரில் சாரதா மகளிர் வித்தியாலயமாக இயங்கி வந்துள்ளது. தங்களிடம் கல்வி பயின்ற பல மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உயர் பதவி நிலைகளில் உள்ளமை, தங்களது அர்ப்பணிப்பு நிறைந்த சேவைக்கும் தலைமைத்துவத்திற்கும் கிட்டிய வெற்றி என்றே சொல்லவேண்டும். இத்தகைய பெருமைக்கும் சிறப்புக்குமுரிய நீங்கள் இன்று எமது பாடசாலைக்கு வருகை தந்து எமக்கும் மாணவச் செல்வங்களுக்கும் ஆசிவழங்குவது பெரும் பாக்கியமாகும். தங்களை நலமுடன் வாழ வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இப்பாடசாலை முதல்வர்கள் வரிசையில் 1999-2007ம் ஆண்டு வரை அதிபர் பதவியில் அமர்ந்து பாடசாலையை முன்னேற்றப் பாதையில் இட்டுச்சென்ற திரு. இ.சிவபாதசேகரம் ஐயா அவர்களே! தாங்கள் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்றீர்கள். தொடர்ந்து

தொடர்ந்து BA Dip பட்டம் பெற்று 1989இல் அதிபருக்கான பரீட்சையில் தேறி, வினைத்திறன் மிக்க அதிபராகி பலரது நன்மதிப்பைப் பெற்றீர்கள் "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய தங்களது பிள்ளைகள் எல்லோரும் நல்ல நிலையில் உள்ளமை தங்களது அப்பழுக்கற்ற சேவைக்கு கிடைத்த வெகுமதி. உங்கள் குடும்பம் நலத்தோடு வாழ மனதார வாழ்த்தி வரவேற்கின்றேன்.

எமது பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு கருத்துடன் செயற்படும் வலயக்கல்வி உத்தியோகத்தர்களே! தங்களது ஆலோசனைகளும் பாராட்டுக்களும் எமது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்பான பெற்றோர்களே, தங்கள் மழலைகள் பரிசு பெறுவதைக் கண்டு மகிழ்வதற்காக வருகை தந்திருக்கிறீர்கள். அனைவரையும் வரவேற்று மகிழ்வுறுகின்றோம். உங்கள் பிள்ளைச் செல்வங்களின் முன்னேற்றத்தில் உங்களுக்கும் பெரும் பங்குண்டு, அவர்களுக்கு கல்வி ஊக்கத்தையளியுங்கள். அவர்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் மிகவும் விழிப்பாக இருங்கள். அவர்களின் ஒளிமயமான எதிர்காலம் உங்கள் கைகளில் தங்கியுள்ளது, என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்பாடசாலையின் மாணவர்களின் கல்வியில் கருமமே கண்ணாக கடமையாற்றி வரும் ஆசிரியப் பெருந்தகைகளே! ஒவ்வொரு பிள்ளையையும் உங்கள் பிள்ளை போல் அரவணைத்து, அன்பு சொரிந்து, வழிநடத்தி வருவதைக் கண்டு பெருமை அடைகின்றேன். மாணவர்கள் கல்வியில் சிறக்க வழிகாட்டுவதுடன் தங்கள் வாழ்வு சிறக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புக்குரிய மழலைச் செல்வங்களே! இன்று பலர் பரிசில்களைப்பெற பரிசில் கிடைக்கவில்லையே என்று ஏங்கத் தேவையில்லை. முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. எனவே முயற்சியை கைவிடாது கல்வியில் ஊக்கம் காட்டுங்கள். வெற்றி உங்களை நாடிவரும். உங்களது பாடசாலைக்கும் பெருமை சேர்ப்பீர்கள். கடந்த காலங்களில் இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் நல்ல பதவிகளில் வசதியாக வாழ்கின்றார்கள் உதாரணத்திற்கு இன்று வருகை தந்திருக்கும் சிறப்பு விருத்தினர் திருமதி. பூங்கோதை, பாலசுப்பிரமணியம் அவர்களைச் சுட்டிக்காட்டலாம். எனவே அனைத்து மாணவச் செல்வங்களும் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எமது பாடசாலையை உருவாக்கிய எமது ஸ்தாபகர், வளர்ச்சிப் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இப் பாடசாலையில் கல்வி கற்றுப் பயன் பெற்ற மாணவர்களை மனதில் இருத்தி 2012ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்விச் செயற்பாடுகள்

மாணவர் விபரம்

மாணவர் தொகை	ஆண்	பெண்	மொத்தம்
தரம் 1- 5	26	23	49
தரம் 6 – 11	45	36	81
	71	59	130

ஆசிரியர் விபரம்

1. செல்வி. க. கமலநாயகி (முதல்வர்) **SL.P.S.I**
2. திருமதி. ப. சுந்தரலிங்கம் - விவசாய விஞ்ஞானம்
3. திருமதி ப. முருகதாஸ் - கணிதம்
4. திருமதி. தி. ஸ்ரீவிசயன் - விஞ்ஞானம்
5. திருமதி. த. காயாரோகணன் - தமிழ்
6. திருமதி. சா. குணேந்திரன் - ஆரம்பக்கல்வி
7. திருமதி. ச. மகேந்திரராசா - சமூக விஞ்ஞானம்
8. திருமதி. ப. இராசவிசாகன் - சங்கீதம், சைவநெறி
9. திருமதி. ரே. சிவராசா - ஆரம்பக்கல்வி
10. செல்வி. பு. கனகசபை - வணிகமும் கணக்கியலும்.
11. திருமதி வி. ஞானேந்திரன் - நடனம்
12. திருமதி. தே. கணேசானந்தன் - கணிதம்/ விஞ்ஞானம்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1. திருமதி. சு. நடேசராசன் - விஞ்ஞானம்
2. திருமதி. வ. நவாஸ்சங்கர் - ஆரம்பக்கல்வி
3. திருமதி. சி. நந்தகுமார் - ஆரம்பக் கல்வி
4. திருமதி. சி. அம்பிகைபாகன் - ஆங்கிலம்
5. திருமதி. க. செல்வராசா - விவசாய விஞ்ஞானம்.

பதவி உயர்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்

திரு. சி. பிரகாசன் - இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையின் சித்தியடைந்து உதவிப் பரீட்சை ஆணையாளராகப் பதவி உயர்வுபெற்றுச் சென்றமை எமக்குப் பெருமை தருவதாகும்.

தற்காலிக இணைப்பில் இடமாற்றம் பெற்றவர்

1. திருமதி. கவிதா ஜெயக்குமார்
2. திருமதி. த. செல்வராசா
3. திருமதி. L.H. மூர்த்தி

புதிதாக இணைக்கப்பட்டோர்

1. திருமதி. ப. கிருஷ்ணதாசன் - ஆங்கிலம்
2. திருமதி. கலா. அருளநாதன் - ஆரம்பக்கல்வி
3. திருமதி. பத்மாவதி லோரன்ஸ் -வணிகக்கல்வி
4. திருமதி. தேவகி யோகராஜா - அலுவலக உதவியாளர்
5. திரு. இ. தபானந்தன் - ஆரம்பக்கல்வி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர் - செல்வி. க. கமலநாயகி – பதவி வழித்தலைவர்
செயலாளர் - திருமதி அ. தட்சாயினி
பொருளாளர் - திருமதி சா. குணேந்திரன்
உறுப்பினர்கள் - திரு. க. கணேசலிங்கம்
திரு. செ. இராசேந்திரன்
திரு. நா. ரஞ்சித்குமார்
திருமதி. ப. லக்சுமி
திருமதி. சி. மஜீந்திரன்
திருமதி அ. தட்சாயினி
திருமதி.தெ. வசந்தகுமாரி
திரு.சி.சுதர்சன்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

தலைவர் - திருமதி. ப.முருகதாஸ்
செயலாளர் - திருமதி ரே.சிவராசா
பொருளாளர் - திருமதி.த.காயாரோகணன்

2012ல் 5ம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்
செல்வி சி. சாருஜா (151 புள்ளிகள்)

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

1. ச. மதுஷா 127
2. க. அபிஷா 121
3. உ. லாவண்யா 114

2011 இல் க.பொ.த(சா/த) சித்தி பெற்று க.பொ.த(உ/த) கற்க வேறுபாடசாலைக்குச் சென்றோர் விபரம்

1. க. ஜனனி கணேசலிங்கம்
2. ச. கலைவாணி
3. செ. கௌசிகா
4. அ. பிரியா
5. பா. பாருகன்

2012 இல் க.பொ.த(சா/த) சித்தி பெற்று க.பொ.த(உ/த) கற்க வேறுபாடசாலைக்குச் சென்றோர் விபரம்

1. இ. துவாரகா

மன்றச் செயற்பாடுகள்	பொறுப்பாசிரியர் பெயர்	தலைவர்	செயலாளர்
இந்து மன்றம்	திருமதி. ப. இராசவிசாகன் திருமதி. வி. ஞானேந்திரன் திருமதி. ரே. சிவராசா.	ச.விதுர்ஷன்	சு. டிலக்சன்
தமிழ் மன்றம்	திருமதி. த. காயாரோகணன் திருமதி. சா. குணேந்திரன்	கு. பிருந்தா	வி. ஜனனி
கணித, விஞ்ஞான மன்றம்	திருமதி. ப. முருகதாஸ் திருமதி. தே. கணேசானந்தன் திருமதி. தி. ஸ்ரீவிஜயன்	அ. புருஷாந்தன்	வி.விஜதினி
ஆங்கிலமன்றம்	திருமதி. ப. கிருஷ்ணதாசன்	க. சரண்ராஜ்	க.கமலோஜன்
சுகாதாரக் கழகம்	திருமதி. தி. ஸ்ரீவிசயன் திருமதி ப. சுந்தரலிங்கம்	த.தேனுஜன்	சு.டிலக்சன்

இம் மன்றங்களும், கழகங்களும் சிறப்பாக தொழிற்பட்டு எமது பாடசாலையின் கல்விச் செயற்பாட்டிற்கு உறுதுணை புரிகின்றன. இம் மன்றங்களின் செயற்பாட்டிற்கு பொறுப்பாக இருக்கும் ஆசிரியர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2012,2013ல் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் பெருமை சேர்த்தோர்

1. நா. கலைநிலவன் - திருக்குறள் மறைப்போட்டி கோட்டம் 3ம் இடம் (2012)
2. து. விதுஷிகா - பண்ணிசை கோட்டம், வலயமட்டம் 1ம் இடம் (2012)
3. வி.விஜிகரன் - தோரணம் பின்னுதல் வலயமட்டம் 1ம் இடம் (2012)
4. வி. ஜனனி -சமூகவிஞ்ஞானப் போட்டிமாகாணமட்டம் - 3ம் இடம் (2012)

5. சி. சர்மிலன் - சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டம், வலயமட்டம் - 1ம் இடம் (2013)

6. வி. ஜனனி - சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்ட, வலயமட்டம், 1ம் இடம் (2013)

பாடசாலைப் பௌதிகவள அபிவிருத்தியும் உதவும் நிறுவனங்களும்.

எமது பாடசாலையில் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலில் உலக உணவு நிதியூடாக புதிய சமையலறை அமைக்கப்பட்டது. அத்துடன் வகுப்பறை ஒன்று கணினி அறையாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது இதற்காக NSDG நிதியூடாகவும் மற்றும் பழையமாணவர் திருமதி.க.மோகனதாஸ் அவர்களின் பங்களிப்புடனும் நிறைவேறியது.

மேலும் திருமதி நல்லைநாதன் குடும்பத்தினர் எமது பாடசாலையின் அலுவலக கூரைக்கு சீற் அடித்துதவியுள்ளனர். மேலும் எமது பாடசாலையின் முன்னால் முதல்வர் அமரர் இ.கந்தையா அவர்களின் புத்திரரும், பழைய மாணவரும் தொழிலதிபருமான உயர்திரு. க. சுசீந்திரன் தம்பதியினர் பாடசாலைக் கல்விசார் செயற்பாடுகளுக்கு தங்களால் இயன்ற உதவிகளை மனங்கோணாது வழங்கி வருவது போற்றத்தக்கது. பிரார்த்தனை மண்டபத்தினை அமரர் இ. கந்தையா அவர்களின் குடும்பத்தினர் அமைத்து உதவிய நிலையில், அதனோடு சேர்ந்து பூர்த்தி செய்யப்படாதிருந்த 25x45' அளவு கொண்ட மேல் மாடிக் கட்டிடத்தினையும் 2012 இல் லண்டன் றீச்சாட் அமைப்பினூடாக பதின்மூன்று லட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்து வழங்கியுள்ளமையை நன்றியுணர்வோடு ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம். அத்தோடு பாடசாலைக்குரிய பெயர் வளைவையும் 2012ம் ஆண்டில் திரு. க. சுசீந்திரன் தம்பதியினர் அமைத்து

உதவியுள்ளனர். அவர்களே பாடசாலை பவளவிழா நினைவாக அழகிய சரஸ்வதி சிலை ஒன்றையும் அமைத்து, பாடசாலையை மேலும் அழகுபடுத்தியமை எம்மால் பாராட்டப்பட வேண்டியதாகும்.

எமது பாடசாலையின் பவள விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்த போது நிதிப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. அவ்வேலையில் பவள விழா சிறப்பு மலருக்கான செலவினை ஸ்தாபகர் அமரர்.இ.தம்பித்துரை அவர்களின் குடும்பத்தினரான, அவர்களின் சகோதரர் திரு. இ. முருகையா திரு. திருமதி அருமைத்துரை தம்பியினரே பொறுப்பேற்று, எமக்குப் பேருதவி புரிந்தமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலை வளாக வைரவர் ஆலயம் கனடாவில் வசிக்கும் திரு. கணேசன் தம்பி குடும்பத்தினரால் நல்ல முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதனை நல்லமுறையில் அமைத்து வழங்கிய சி. மாதவகுமாரன் அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற விரும்புகின்றேன்.

எமது பாடசாலையில் கருணையுள்ளம் படைத்த, வள்ளண்மை உள்ளவர்கள் தமது உதவிக் கரங்களால் நிதியங்களை ஆரம்பித்து நற்பண்புகளும், ஆளுமையும் கொண்ட எதிர்கால சந்ததியினரை உருவாக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பாடசாலைத் தேவைகள்

1. வகுப்பறைகளுக்கு மின் இணைப்புச் செய்தல்
2. வகுப்பறைகளுக்கு நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்கள் அமைத்தல்
3. மனைப்பொருளியல் அறை புனரமைப்புச் செய்தல்
4. விஞ்ஞான ஆய்வு கூடத்தை நவீன மயப்படுத்துதல்
5. பாடசாலைக்கு சுற்றுமதில் அமைத்தல்
6. பயிர்ச் செய்கைக்கு ஏற்ற வகையில் சொட்டு நீர்ப் பாசன வசதிசெய்தல்.
7. தரம் 3,4,5 வகுப்புக்களின் கூரை சீர் செய்யப்படுதல்.
8. அலுவலகக் கூரை, தளம் என்பன சீர் செய்யப்படுதல்
9. நடன அறை ஆசிரியர் ஒய்வு அறை என்பன அமைத்தல்
10. மாணவர், ஆசிரியர் வாகனத் தரிப்பிடம் அமைத்தல்

பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி உதவுவோர்

1. ஸ்தாபர் அமரர். இ. தம்பித்துரை அவர்களின் செலவில் கல்வி அபிவிருத்தி நிதியம் ஊடாக தரம் -05 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு மாதாந்தம் 1500/= வழங்கப்படுகின்றது. மேலும் இந்நிதியத்தினூடாக க.பொ.த(சா/த) சித்திபெற்று வேறுபாடசாலைகளில் க.பொ.த (உ/த) கற்கும் மாணவர்களின் பொருளாதார நிலை கருதி நான்கு மாணவர்களுக்கு மாதாந்தம் 500/= உதவுதொகை வழங்கப்படுகிறது அத்தோடு தரம் - 5 புலமைப்பரிசில் சித்தி பெற்று தொடர்ச்சியாக இப் பாடசாலையிலேயே கல்வி கற்று வரும் செல்வன் இ. துஷிவர்த்தன் மாதாந்தம் ரூ. 500/= உதவு தொகையாகப் பெற்று வருகின்றார்.

2. இப்பாடசாலையில் பிரதி அதிபராய் இருந்து ஓய்வு பெற்ற திரு. க .இரத்தினபூபாலன் அவர்களால் ரூ 25000 நிலையான வைப்பிலிடப்பட்டு, அதன் வட்டியூடாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுகிறது.

3. திருமதி உமா. நிர்குணன் அவர்களால் தரம் -11 இல் சித்தி பெறுபவர்களுக்கும் பரிசளிப்பதற்கென ரூபா 15000 நிலையான வைப்பில் இடப்பட்டு அதன் வட்டியின் ஊடாக பரிசில்கள் வழங்கப்படுகிறது.

4. க.பொ.த(சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் உயர்மட்ட சித்திபெறும் இருவருக்கு பரிசில் வழங்குவதற்காக திரு.சி.திருச்செல்வம். ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் அவர்களால் ரூ 25000/= வைப்பிடப்பட்டு அதன் வட்டியில் இருந்து க.பொ.த. சாதரணதரத்தில் கணித பாடத்தில் திறமைச் சிததி பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இம்முறை இப்பரிசில் வழங்கப்படவில்லை

5. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினுடாக தாய், தந்தையை இழந்த இரு மாணவர்களுக்கும், க.பொ.த(சா/த) சித்தி பெற்ற ஒரு மாணவருக்கும் மாதாந்தம் ரூபா 500/= உதவுதொகை வழங்கப்படுகிறது.

6. பாடசாலையின் பௌதீக வளவிருத்திக்கென ரூபா 24000 பொறுமதியான பொருட்களை திரு.இராமநாதன் சத்தியநாதன் அவர்கள் வழங்கி உறுதுணை செய்துள்ளார்.

7. கணிணி அறையின் மேம்பாட்டிற்காக ரூபா 25000 பெறுமதியான கண்ணாடி யன்னல்களை பொருத்துவதற்கு திரு.திருமதி க.மோகனதாஸ் அவர்கள் உதவியுள்ளார்கள்.

இவ்வருடம் பரிசளிப்பு விழாவில் தரம் 10 இல் பரிசு பெறும் மாணவருக்குரிய பரிசில்களை இப்பாடசாலையின் பழைய மாணவியான திருமதி. சி. பத்மநேசன் வழங்கியுள்ளார்.

8. இப்பாடசாலையின் பழைய மாணவன் திரு. கு. ரவீந்திரன் அவர்கள் தந்தையை இழந்த மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500/= உதவுதொகையாக வழங்கி வருகின்றார். பா. பிரணவன் தரம் -2, ச. அபீர்சன், தரம் 4, அ. சங்கவி தரம் - 4 த.மனோஜ்குமார் தரம் -9 என்போர் இந்த உதவிகளைப் பெற்று வருகின்றனர்.

9. இப் பாடசாலையின் பழைய மாணவி திருமதி, மைதிலி, துஷ்யந்தன் நான்கு மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 500 உதவு தொகையாக வழங்கி வருகின்றார் தரம் - 1 சேர்ந்த வி. வினுஜா, சி. நிசாகரன், மு. தரணிகா என்போரும் தரம் 3 மாணவி பிரியங்காவும் இந்நிதியைப் பெறுகின்றனர்.

இவ் வருடத்தில் நடைபெறும் பவளவிழா, பரிசளிப்பு விழா என்பவற்றிற்காக அமரர் மகேஸ்வரி தேவ சகாயம் அவர்களின் நினைவாக அவர்களின் மகன் திரு. தே. நடனகுமார் அவர்கள் ரூபா 15 000 வழங்கி உதவியுள்ளார்.

பவள விழா பரிசளிப்புவிழா என்பவற்றிற்கு பங்களிப்பு செய்தோர் விபரம் (பணப் பெறுமதியில்)

1.	திரு.தே.நடனகுமார் அமரர் மகேஸ்வரி தேவசகாயம் நினைவாக	15000/=
2.	பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள்	12000/=
3.	திருமதி. கௌரி. தெய்வேந்திரம் (பழைய மாணவி)	10000/=
4.	திருமதி.ச.பத்மநேசன் (பழைய மாணவி) (பரிசளிப்பு விழா பரிசில்கள்)	10000/=
5.	திரு.லோ.திருமாறன் (பழைய மாணவன்)	10000/=
6.	செல்வி.க.கமலநாயகி (அதிபர்)	5000/=
7.	திரு.க.ரவீந்திரன் (பழைய மாணவன்)	5000/=
8.	திரு.சி.அம்பிகாவதி (பழைய மாணவன்)	5000/=
9.	திரு.சி.சுஜீவன் (பழைய மாணவன்)	5000/=
10.	திரு.க.இரத்தினபூபாலன்(ஓய்வு பெற்ற அதிபர்)	3000/=
11.	திருமதி.ரே.சிவசிதம்பரம்	2000/=
12.	திருமதி.ப.தியாகராஜா (அமரர் அறுமுகம் நினைவாக)	2000/=
13.	திருமதி. தெ. வசந்தகுமாரி (பெற்றோர்)	1500/=
14.	திரு. அரசகுலசேகரம் (பெற்றோர்)	1000/=
15.	திரு. தர்மஜெயபாலன் (பெற்றோர்)	1000/=
16.	திரு.சிவஸ்ரீ சந்தனக்குருக்கள்	1000/=

நன்றி நவில்கின்றோம்.

எமது வித்தியாசாலையின் பவள விழாவுடன் இணைந்த பரிசளிப்பு விழா நடைபெறும் நன்நாளில் பிரதம விருந்தினராக வருகைதந்தது சிறப்பிப்பதோடு எம் மாணவச் செல்வங்களுக்கும் பரிசில்களை வழங்கி மகிழ்விக்க இருக்கும், யாழ் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழா வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் திருமதி. பூங்கோதை, பாசுப்பிரமணியம் அவர்கள் பாடசாலையின் பழைய மாணவி என்ற பெருமையோடு வருகை தந்து கலந்து கொண்டுள்ளார். அவருக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். பாடசாலையின் வளர்ச்சிப்படிகளில் மிக உன்னத பணியாற்றி ஓய்வு நிலையில் இன்று கௌரவ விருந்தினர்களாக சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. செ. நவரட்ணம் அம்மையார் அவர்களுக்கும் தி. இ. சிவபாதசேகரம் ஐயா அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்பாடசாலை நிர்வாகத்தை சிறப்பாக நடாத்துவதற்கு வேண்டிய ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்கி வரும் கல்விப்புலம் சார்ந்த சான்றோர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்வருட பவள விழா சிறப்பு மலர் வெளியீட்டிற்கான நிதியுதவியினை வழங்கிய ஸ்தாபகர் குடும்பத்தினருக்கும், விழாவிற்கு வருகை தந்துள்ள அயற் பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், ஏனைய விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள்ளோன் நிர்வாகத்திற்கு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும்,

இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் அயராது உழைத்து வரும் ஆசிரியர்கள், ஏனைய மாணவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கும் மாணவ முதல்வர்கள் யாவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தை அழகிய முறையில் புனரமைத்துதவிய கனடாவைச் சேர்ந்த திரு. கணேசன் தம்பி குடும்பத்தினருக்கும், அதை முறையாக நிறைவேற்றித் தந்த திரு. சி. மாதவகுமார் (ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அலுவலகக் கூரைக்கு சீற் அடித்து உதவிய நல்லை நாதன் குடும்பத்தினருக்கும் கணிணி அறையை சீர் செய்ய உதவிய திருமதி மோகனதாஸ் குடும்பத்தினருக்கும் பௌதீகவள அபிவிருத்திக்கான உதவியைச் செய்த திரு.இ.சத்தியநாதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பரிசுத்தின அறிக்கையை நேர்த்தியாக அச்சுப்பதித்துதவிய சத்தியா பதிப்பகத்தாருக்கும் ஒலி, ஒளி அமைப்புச் செய்துதவிய திரு. செ. இராசேந்திரம் அவர்களுக்கும். மனமார்ந்த நன்றிகள். முதிய போசன விருந்துபசாரத்திற்கு பங்களிப்புச் செய்த ஸ்தாபகர் குடும்பத்தினருக்கும் பிற்பகல் தேநீர் விருந்துபசாரத்திற்கு பங்களிப்பு செய்த பழைய மாணவியான கௌரி. தெய்வேந்திரத்திற்கும். இன்னும் தவறுதலாக நன்றி கூறாது விடப்பட்ட அனைவருக்கும் நன்றி உரித்தாகட்டும்.

எமது பாடசாலைப் பணிகளுக்கு உதவி தேவைப்படும் போதெல்லாம். சரீர உதவிகளைப் புரிந்து வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

முன்றலில் சரஸ்வதி சிலையையும் நிறுவித்தந்த பழைய மாணவர்களான சுசீந்திரன் தம்பதியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பரிசுத்தின அறிக்கையை நேர்த்தியாக அச்சுப்பதித்துதவிய சத்தியா பதிப்பகத்தாருக்கும் ஒலி, ஒளி அமைப்புச் செய்துதவிய திரு. செ. இராசேந்திரம் அவர்களுக்கும். மனமார்ந்த நன்றிகள். மதிய போசன விருந்துபசாரத்திற்கு பங்களிப்புச் செய்த ஸ்தாபகர் குடும்பத்தினருக்கும் பிற்பகல் தேநீர் விருந்துபசாரத்திற்குப் பங்களிப்பு செய்த பழைய மாணவியான கௌரி. தெய்வேந்திரத்திற்கம். இன்னும் பல வகையிலும் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் தவறுதலாக நன்றி கூறாது விடப்பட்ட அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
பரிசளிப்பு விழா – 2012
01.08.2013

பரிசில் பெறுவோர் விபரம்

பொதுத்தகைமை

தரம் -1

(1) ச. வேணுஜன்
(2) ப. யதிவர்ணன்
(3) பா. பிரணவன்
(4) சி. மகிழினி

தரம் - 2

(1) இ. ஜஸ்மின்
(2) சி. பிரியந்தன்
(3) சு. துவாரகன்

தரம் - 3

(1) அ. சங்கவி
(2) ச. அபிர்ஷன்
(3) நா. கலைநிலவன்
(4) சு. மதுசாந்

தரம் - 4

(1) த. கிதூஷிகா
(2) ர. லத்திக்கா
(3) ர. அபிநயா.

தரம் - 6

(1)	இ. துஷிவர்த்தன்	- தமிழ், கணிதம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், சங்கீதம் குடியுரிமை, தொழில்நுட்பம், சுகாதாரம் 1ம் இடம் சமயம் விஞ்ஞானம் - 2ம் இடம்
(2)	சோ. நிரூசனா	- சமயம் - 1ம் இடம் தமிழ், நடனம்,புவியியல், தொ.நுட்பம் -2ம் இடம் சுகாதாரம், குடியுரிமை –3ம் இடம்
(3)	சு. சிந்துஷன்	- குடியுரிமை, சுகாதாரம் 2ம் இடம் தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம், விஞ்ஞானம்,தொ.நுட்பம் 3ம் இடம்

(4) த. மிலானி - நடனம் 1ம் இடம்
கணிதம், ஆங்கிலம்,
வரலாறு – 2ம் இடம்.

(5) ற. சாயிராம் - விஞ்ஞானம் - 1ம் இடம்
வரலாறு, புவியியல், - 3ம் இடம்

(6) ச. துளசிகா - சங்கீதம் 2ம் இடம்

(7) றொ. டக்ஷனா - நடனம் 3ம் இடம்

(8) சி. சுகிந்தா - சங்கீதம் 3ம் இடம்

தரம் - 7

(1) சி. சர்மிலன் - தமிழ், சமயம், கணிதம், விஞ்ஞானம்,
புவியியல் வரலாறு குடியுரிமை,நடனம்
தொ.நுட்பம், சுகாதாரம் - 1ம் இடம்
ஆங்கிலம் 2ம் இடம்

(2) க. சயந்தன் - தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல்,
நடனம், வரலாறு, குடியுரிமை
தொ.நுட்பம் - 2ம் இடம்
சமயம் - 3ம் இடம்

(3) இ. யதுஷன் - ஆங்கிலம் 1ம் இடம் சங்கீதம் 2ம் இடம்
சமயம், தமிழ், கணிதம், சுகாதாரம்
புவியியல் - 3ம் இடம்

(4) வ. றூபினா - சங்கீதம் 1ம் இடம்
சமயம், சுகாதாரம் - 2ம் இடம்
தொழில்நுட்பம் விஞ்ஞானம் குடியுரிமை 3ம் இடம்

(5) ர. அஜித்தா - சங்கீதம் 3ம் இடம்

தரம் - 8

(1) ச. அம்ஷா - சமயம், கணிதம், தொழில்நுட்பம், வரலாறு, சங்கீதம் -1ம் இடம் புவியியல் 2ம் இடம்

(2) பா. சிவாஜனா - சுகாதாரம், புவியியல் - 1ம் இடம்
தொழில்நுட்பம், சமயம், வரலாறு 2ம் இடம், சங்கீதம்- 3ம் இடம்

(3) உ. ஹரிஜனன் - தமிழ், ஆங்கிலம் - 1ம் இடம்
விஞ்ஞானம் - 2ம் இடம்
குடியுரிமை 3ம் இடம்

(4) சா. அனுஷன் - விஞ்ஞானம், குடியுரிமை, - 1ம் இடம்
தமிழ், கணிதம், - 3ம் இடம்

(5) கு. மனோஜித் - ஆங்கிலம் -1ம்இடம்கணிதம், குடியுரிமை, சுகாதாரம் -2ம் இடம்
தொழில்நுட்பம், தமிழ் - 3ம் இடம்

(6) ம. சர்விகா - நடனம் 1ம் இடம்
சுகாதாரம் வரலாறு 3ம் இடம்

(7) பா. ஆதவன் - தமிழ், சங்கீதம் 2ம் இடம்
சமயம் - 3ம் இடம்

(8) உ. பிரியந்தினி - சமயம், நடனம் - 2ம் இடம்

தரம் - 9

(1) வி. விஜிதினி - வரலாறு, தொழில் நுட்பம், 1ம் இடம்
தமிழ், விஞ்ஞானம் குடியுரிமை - 2ம் இடம்
சுகாதாரம்,சமயம், கணிதம், சங்கீதம் 3ம் இடம்

(2) ச. விதுஷிகா - சமயம், சங்கீதம் ,தொழில்நுட்பம்- 1ம் இடம்
வரலாறு, 2ம் இடம்.குடியுரிமை 3ம் இடம்

(3) க. பிருந்தா - தமிழ், குடியுரிமை, - 1ம் இடம்சுகாதாரம்,
சமயம் வரலாறு சங்கீதம் - 2ம் இடம்
புவியியல், தொழில்நுட்பம் 3ம் இடம்

(4) சே. மதியழகன்- சுகாதாரம், கணிதம்,புவியியல் -1ம் இடம்
விஞ்ஞானம் - 3ம் இடம்

(5) சு. டிலக்ஸன் - விஞ்ஞானம், புவியியல்- 1ம் இடம்
கணிதம் - 2ம் இடம் தமிழ் 3ம் இடம்

தரம் - 10

(1) வி. ஜனனி -சமயம்,கணிதம், விஞ்ஞானம்,வரலாறு,நடனம், வர்த்தகம், சுகாதாரம் 1ம் இடம்
தமிழ்- 2ம் இடம்

(2) கு. பிருந்தா - தமிழ், புவியியல் -1ம் இடம் சமயம், வரலாறு, சுகாதாரம், சங்கீதம் - 2ம் இடம் விஞ்ஞானம் 3ம் இடம்.

(3) கை. பிரசாந்தி - விஞ்ஞானம் வர்த்தகம் -2ம் இடம் சமயம், வரலாறு கணிதம்,சுகாதாரம், சங்கீதம் - 3ம் இடம்

(4) க. கமலோஜன்- ஆங்கிலம் - 1ம் இடம்
புவியியல் - 2ம் இடம் தமிழ் - 3ம் இடம்

(5) த. தேனுஜன் - கணிதம் - 2ம் இடம் வர்த்தகம் 3ம் இடம்

(6) ம. கஸ்தூரி - சங்கீதம், விவசாயம் - 1ம் இடம்

(7) க. சரண்ராஜ் - விவசாயம் 2ம் இடம்
தமிழ் இலக்கியநயம் 1ம் இடம்

(8) வி. விஜிகரன் -விவசாயம்., புவியியல் - 3ம் இடம்.

(9) அ. புருஷாந்தன் - தமிழ் இலக்கியம் 2ம் இடம்

2011 க.பொ. த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த.(உ.த) கற்கத் தகுதி பெற்றோர்.

(1) க. ஜனனி
(2) பே. கௌசிகா
(3) பா. பாருகன்
(4) ச. கலைவாணி
(5) அ. பிரியா

2012 க.பொ. த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த.(உ.த) கற்கத் தகுதி பெற்றோர்.

(1) இ. துவாரகா

2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்.

(1) சாருஜா சத்திய சிவம் 151 புள்ளி

2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100ற்கு மேல் புள்ளி பெற்றவர்.

(1) மதுஷா சயந்தன் - 127
(2) அபிஷா கஜேந்திரராசா - 121
(3) லாவண்யா உதயஸ்ரீ - 114

விசேட பரிசில் பெறுவோர்

(1) சு.மதுஷாந் - சித்திரப்போட்டி வலயமட்டம் 1ம் இடம்

(2) ச.சாருஜா-
சைவத்திறன் போட்டி, பேச்சு கோட்டமட்டம் 3ம் இடம்

(3) ம. கஸ்தூரி - பண்ணிசை கோட்டமட்டம்- 3ம் இடம்

(4) க. கஜனி-
சகலசலாவல்லிமாலை ஓதல்- கோட்டமட்டம் 2ம் இடம்

(5) சா. அனுஷன்-
தோரணம் பின்னுதல் கோட்டமட்டம் 3ம் இடம்

(6) க. நிதுஷன் - 15 வயதுப் பிரிவு 200m ஓட்டம்
கோட்டமட்டம் 3ம் இடம்
நீளம் பாய்தல் கோட்டமட்டம் 1ம் இடம்.

(7) பு. பிரசாந்-
புத்தாக்கம் (விஞ்ஞானம்) – 1ம் இடம் கோட்டமட்டம்

(8) தெ. கீர்த்திகன்-
புத்தாக்கம் (விஞ்ஞானம்) – 1ம்இடம் கோட்டமட்டம்

(9) செ. பிரியதர்ஷன்-
புத்தாக்கம் (விஞ்ஞானம்) –2ம் இடம் கோட்டமட்டம்

(10) நா. கலைநிலவன்-
திருக்குறள் மனைப்போட்டி கோட்டம் 3ம் இடம்

(11) அ. பவித்திரா-
சித்திரப்போட்டி கோட்டம் 3ம் இடம் (2012)

(12) ச. விதுஷிகா- பண்ணிசை கோட்டமட்டம் 1ம் இடம் (2011)
பண்ணிசை கோட்ட மட்டம் 1ம் இடம்
வலய மட்டம் 1ம் இடம் (2012)

(13) வி. விஜிகரன் -
தோரணம் பின்னுதல் கோட்டம் 1ம் இடம் (2011)
தோரணம் பின்னுதல் கோட்டம் 2ம் இடம்
வலயமட்டம் 1ம் இடம் (2012)

(14) வி. ஜனனி-
தனி நடனப்போட்டி கோட்டமட்டம் 2ம் இடம் (2011)
சமூகவிஞ்ஞானப் போட்டி மாகாணமட்டம் 3ம் இடம் (2012)

பாடசாலைக் கீதம்

ராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

பல்லவி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம்–அன்னையை நிதம்
வாழ்த்தி புகழ்வோம்–சிறுவர்கள் நாம்

அனுபல்லவி

வாழ்த்தி தலை வணங்கி கலைகலா ஞான வாணி
ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை (வாழ்த்தி)

சரணம்

கொக்குவில் பதியில் ஒளிர்குன்றின் விளக்கம் எங்கள்
கோலக் கலையகத்தின் கொஞ்சும் தமிழ் மணமும்
திக்குப் பலவும் வென்று திகழும் புனித சைவச்
சோதிச் சுடர் ஒளிரும் தூய மனம் அருள (வாழ்த்தி)

சாதி சமய இன பேத எதுவும் நெஞ்சை
சுடச் சிறுவருளச் சால்பு திரிந் திடாமல்
நீதி நெறி பயிற்றி நித்தியம் புகழுலகில்
பாதை வகுத்து மனுப் பண்பை வளர்க்கும் தாயை (வாழ்த்தி)

அறிவியல் அழகியலும் அருமை மொழியியலும்
நெறி வளர் மதவியலும் நெஞ்சில் மலர வைத்து
நிறைவு தரும் அன்னையே நின்போர் புகழுலகில்
நின்றே வளர்வதென்று நின்றாள் பரவியென்றும் (வாழ்த்தி)

அச்சமைப்பு சத்தியா பிறிண்டேர்ஸ்,யாழ் 0771386661